# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2044/22 - 2017 නොවැම්බර් මස 07 වැනි අඟහරුවාදා - 2017.11.07

2044/22 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ATU/LAD/04/DO/12.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2015/VR 24.

ஒரு பகிரங்கச் தேவைக்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசு எண்ணியிருக்கின்றது என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்**

மாத்தறை மாவட்டத்தில் ககபடபத்துவ வடக்கு அதுரலிய பிரதேச செயலாளர் பிரிவிலே உக்கஸ்ஹேன எனும் கிராமத்திலமைந்துள்ள மாத்தறை நில அளவை மாஅதிபரின் அ.க.பி. 87 மேலதிக எண் 43ஐக் கொண்ட இறுதி முற்படப்பிரதியிலே குறிக்கப்பட்டுள்ள கீழ்வரும் எல்லைகளை உள்ளடக்கிய பகுதி:

**காணித் துண்டு இல.: 696**

காணியின்பெயர் : வில்பிடவத்த கம்பியடிய; காணியின் விபரம்: தோட்டப் பாதை மற்றும் பற்றைக்காடு; உரிமை கோருவோர்: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, த.பெ. இல. 1526, இல. G 82,ஹெக்டர்கொப்பாகடுவ மாவத்தை,கொழும்பு 07; விஸ்தீரணம்: 23.1977ஹெக்டயாச்.

**காணித் துண்டு இல.: 697**

காணியின்பெயர்: வில்பிடவத்த கம்பியடிய; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம் கலப்பு பயிர்களைக் கொண்டுள்ளது; உரிமை கோருவோர்: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, த.பெ. இல. 1526, இல.G82,ஹெக்டர்கொப்பாகடுவமாவத்தை,கொழும்பு 07; விஸ்தீரணம்: 0.0568ஹெக்டயாச்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதுரலிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளில் எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தீபிகா கே. குணரத்ன,  
பிரதேச செயலாளர்,  
அதுரலிய.

பிரதேச செயலகம்,  
அதுரலிய,  
2017, ஒற்றோபர் 30.

11-986


1A - G 26561 — 19 (2017/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*